தூத்துக்குடி மாவட்டம்

T

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2024

## வகுப்பு - 11

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 45

**I. (பலவுள் தெரிக) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: 7×1=7**

1) வடகரை நாட்டில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த பறவை ............
   அ) நாரை ஆ) உள்ளான் இ) கழுகு ஈ) குருவி
2) அழகிய பெரியவனின் இயற்பெயர் ............
   அ) அரவிந்தன் ஆ) ஜெயமோகன் இ) கவிராயர்
3) 'வான் பொய்த்தது' என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள் ............
   அ) வானம் இடிந்தது ஆ) வானம் பொய்யானது
   இ) மழை பெய்யவில்லை ஈ) மின்னல் வெட்டியது
4) 'மாநகர்' என்பதன் இலக்கணக்குறிப்பு ............
   அ) பண்புத்தொகை ஆ) பெயரெச்சம்
   இ) வினையெச்சம் ஈ) உரிச்சொற்றொடர்
5) கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை
   அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப் பொருட்கள்
   i) அ - மட்டும் சரி ii) ஆ - மட்டும் சரி
   iii) இரண்டும் சரி iv) அ - தவறு, ஆ - சரி
6) பனியும் பனி சார்ந்த நிலமும் ............
   அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) ஆறாம் திணை
7) மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
   அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
   இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி: 5×2=10**

8) தமிழ்நாட்டின் மாநில மரம் - குறிப்பு வரைக.
9) ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
10) 'பாயிரம்' பற்றி நீவிர் அறியும் கருத்து யாது?
11) உயிரீறு, மெய்யீறு - விளக்குக.
12) ஐந்து வேளாண்மை மந்திரங்கள் எவை?
13) கலைச்சொல்லாக்கம் தருக: Weaver Bird, Philosopher
14) பகுபத உறுப்பிலக்கணம் தருக: ஈன்ற

**III. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3×4=12**

15) சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
16) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

www.Padasalai.Net

17) புணர்ச்சி விதி தருக:

பெருங்கல், வில்லொடிந்தது

18) மொழி முதல் இறுதி எழுத்துகள் யாவை? எடுத்துக்காட்டு தருக.

19) தமிழாக்கம் தருக:

1. Knowledge rules the world.
2. Work while you work and play while you play.
3. Delay is dangerous.
4. Roads were made for journey not for destination.

IV. அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடை தருக: 2×6=12

20) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரி. (அல்லது)

நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

21) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

(அல்லது)

யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

22) அடிபிறழாமல் எழுதுக: 1×4=4

ஏடு தொடக்கி ........... எனத் தொடங்கும் பாடல்.

----------

www.Padasalai.Net